

மிக்ஜாம் புயல் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி 7வது வட்டம் கார்கில் நகரில் வசிக்கும் 2000 குடும்பங்களுக்கு கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம். எல்.ஏ. தலைமையில் மீட்பு பணிகளை துரிதப்படுத்தவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் சிறப்பு பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், வனத்துறை அமைச்சர் மதிவேந்தன், நாமக்கல் மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், நாமக்கல் பெ.ராமலிங்கம்ஆகியோர் மக்களுக்குத் தேவையான அரிசி, இருவகை பருப்பு, எண்ணெய் என 25 வகையான மளிகைப் பொருட்கள் குடிநீர், பிரட், போர்வை, பாய், போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்கினர். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.இராமநாதன் திருவொற்றியூர் கிழக்கு பகுதி கழக செயலாளர், மண்டல குழு தலைவர் தி.மு. தனியரசு, த.கார்த்திகேயன், 5வது வட்டக் கழக செயலாளர் கே.பி.சொக்கலிங்கம்எம்.சி., ஆர்.சந்தர், கே.கார்த்திகேயன், பா.பல உமாபதி, எஸ். மகேந்திரன், எம்.கார்த்திக், உசிலைவேந்தன், தொ.மு.ச. தேசிங்கு, எம்.தயாநிதி, எஸ்.கே.இளங்கோ, எஸ்.விஜயராகவன், பா.கஜா, முன்னாள் மகளிர் தொண்டர் அணி ராதா தங்கவேலு, கே.புனிதா, சி.சந்திரலேகா, பி.ஹேமலதா, ஆர்.பிரகாஷ், இரா.கணேசன், அ.ஆனந்தன், மூ.ராம் குமார் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு சுற்றுலா துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நீலகிரி உதகை சோலூர் பேரூராட்சியில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை ஆய்வு செய்தார் மாவட்ட ஆட்சியர் திருமதி மு.அருணா அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## மாநிலங்களுக்குப் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்துவதாக ஒன்றிய அரசு மீது வழக்கு!

### உச்சநீதிமன்றத்தில் கேரள அரசு தொடர்ந்தது!

புதுடெல்லி, டிச.15-

மாநிலங்களுக்கு பொருளாதார நெருக்கடியை ஒன்றிய அரசு ஏற்படுத்தி வருவதாக குற்றம்சாட்டி, கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது.

ஒன்றிய அரசு உரிய நேரத்தில் நிதி பகிர்வை வழங்காதது, கடன் வாங்க அனுமதிக்காதது உள்ளிட்ட காரணங்களால் நிதி நெருக்கடியை சந்தித்து வருவதாக கேரள அரசு தெரிவித்து வந்தது. இந்நிலையில், ஒன்றிய அரசுக்கு எதிராக கேரள அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அந்த வழக்கில், மாநில சுயாட்சிக்கு எதிராக ஒன்றிய அரசு பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வருவதாகவும், ஒன்றிய அரசின் செயல், மாநில சுயாட்சி உரிமைக்கு எதிரானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இல்லாத காரணங்களைக் கூறி கடன் வாங்குவது உள்ளிட்ட விவகாரங்களில் மாநிலங்களுக்கு பல்வேறு தடைகளை ஒன்றிய அரசு ஏற்படுத்தி வருவதாகவும், இதன் காரணமாக நிதி நெருக்கடி அதிகரித்து வருவதாகவும் கேரள அரசு குற்றம்சாட்டியுள்ளது.

நிதிபகிர்வு விவகாரத்தில் கூட்டாட்சியை ஒன்றிய அரசு படிப்படியாக சிதைத்து வருவதாகவும், தனது மனுவில் கேரள அரசு கூறி யுள்ளது. இதனிடையே, கேரள அரசுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்க உடனடியாக 26 ஆயிரம் கோடி ரூபாய் நிதி திரட்ட அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இல்லாவிட்டால் கேரள அரசு கடும் நிதி நெருக்கடிக்குள் தள்ளப்படும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

அரசியல் சாசனப் பிரிவு 131யைப் பயன்படுத்தி இந்த மனுவை உச்சநீதிமன்றத்தில் கேரள அரசு தாக்கல் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மிக்ஜாம் புயல் சேதம்:

## ஒன்றியக் குழு 2-வது நாளாக ஆய்வு!

### இரு பிரிவுகளாகச் சென்று பாதிப்பு பகுதிகளை பார்வையிட்டனர்!

சென்னை, டிச. 15-

மிக்ஜாம் புயல் பாதிப்பு ஆய்வு செய்ய ஒன்றிய குழு திங்களன்று சென்னை வந்தனர். நேற்று முன்தினம் இரண்டு பிரிவுகளாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர். நேற்று ஒன்றியக் குழு சார்ந்த விவசாயம், கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நலத்துறை இணை இயக்குநர் டாக்டர் ஏ.கே.சிவ்ஹரே, ஆற்றல் அமைச்சகத்தின் துணை இயக்குநர் பாவ்யா பாண்டே, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகத்தின் தலைமைப் பொறியாளர் விஜய்குமார் உள்ளிட்டோர் சென்னை கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்புநிலையம், வில்லிவாக்கம் சிட்கோ நகர், அம்பத்தூர் தொழிற்பேட்டை, கொரட்டூர் உள்ளிட்ட பகுதிகளில் காலை ஆய்வு மேற்கொண்டனர்.

கடந்த 3ஆம் தேதி மற்றும் 4ம் தேதி மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட கீழ்ப்பாக்கம், வில்லிவாக்கம் சிட்கோ பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகளை புகைப்படங்களை வைத்தும், தற்போது உள்ள நிலவரத்தை தமிழக அரசு துறை சார்ந்த அதிகாரிகள் ஒன்றிய குழு உறுப்பினர்களுக்கு விரிவாக விளக்கினர். அம்பத்தூர் தொழிற்பேட்டை பகுதிகளில் பணி புரிபவர்கள் மற்றும் பகுதி மக்களிடம் பாதிப்புகள் குறித்து ஒன்றிய குழு கேட்டறிந்தனர்.

மத்திய குழுவின் தலைவர் குணால் சத்யார்த்தி தலைமையிலான மற்றொரு குழு தென் சென்னைக்கு உட்பட்ட வேளச்சேரி கல்கி நகர், பள்ளிக்கரணை, நாராயணபுரம் ஏரி, பெரும்பாக்கம் செம்மஞ்சேரி, தையூர், கண்டிகை, கேளம்பாக்கம், வண்டலூர் உயிரியல் பூங்கா உள்ளிட்ட பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் சேதங்களை நேரில் ஆய்வு செய்தனர். பாதிப்பு விவரங்கள் புகைப்படங் களாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. புகைப்படங் களை பார்வையிட்ட ஒன்றிய குழுவினர் தமிழக அரசின் அதிகாரிகள் மற்றும் பொதுமக்களை நேரில் சந்தித்து பாதிப்பு விவரங்களை கேட்டறிந்தனர்.

ஆய்வுக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஒன்றிய குழு தலைவர் குணால் சத்தியார்த்தி, அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டபோதும், இயற்கை பேரிடர் ஏற்பட்டிருப்பதாகவும், இருந்தாலும் அரசு உடனடியாக நிவாரண பணிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

## அமைச்சர் கே.என்.நேரு தலைமையில்

## சேலம் மேற்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி அறிவிப்பு!

சேலம், டிச. 15-

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதி விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில், சங்ககிரி, சேலம் மெயின்ரோட்டில் உள்ள பி.ஆர்.எம். திருமண மண்டபத்தில் கழக முதன்மை செயலாளர், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு, தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதி நிதிகள், சார்பு அணிகளின் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மருத்துவ அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மீனவர் அணி,



சிறுபான்மை நலக்குழு உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச் சூழல் அணி, தொழிலாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, அயலக அணி, ஆதி திராவிடர் நலக்குழு ஆகிய அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 23.12.2023 சனிக்கிழமை அன்று கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலம் வருகை குறித்து,

24.12.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற உள்ள தி.மு.க இளைஞர் அணி 2வது மாநில மாநாடு குறித்து ஆலோசனை.

கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தமது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

## தஞ்சாவூர் விக்கிரவாண்டி தேசிய நெடுஞ்சாலை பணி!

### சு.கல்யாணசுந்தரம் எம்.பி, - அரசு தலைமைக் கொறடா கோவி.செழியன் ஆய்வு!

தஞ்சாவூர், டிச. 15-

விக்கிரவாண்டியில் இருந்து தஞ்சாவூர் வரையிலான சுமார் 200 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலை தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் கீழ் நான்கு வழிச்சாலையாக கடந்த 2006ம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டது. தொடர்ந்து, இந்த சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றவும் முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து 2010ம் ஆண்டில் அதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு கடந்த 2015ம் ஆண்டு விக்கிரவாண்டி தஞ்சாவூர் இடையேயுள்ள சாலையையும், வழியில் உள்ள பாலங்களையும் புதிதாக அமைக்க பல ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்து அறிவிக்கப்பட்டது. இச்சாலை அமைக்கும் பணிக்காக விக்கிரவாண்டிதஞ்சாவூர் வரை சாலை ஓரங்களில் இருந்த ஆயிரக்கணக்கான மரங்கள், பொதுமக்கள் பலவருடங்களாக குடியிருந்த வீடுகள், சாலையோர கடைகள், வழிபாட்டு தலங்கள், மின் கம்பங்கள் ஆகியவை அகற்றப்பட்டு, நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு சாலை விரிவாக்க பணிகள் நடந்து வந்தது. மேலும், இந்த சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஏற்படுவதாலும், நேரம் வீணாகுவதை கருத்தில் கொண்டும் விபத்தில்லா சாலை களை அமைக்கும் வகையிலும் சாலைகளில் மேம்பாலம் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இந்த பணிகள் தற்போது நடைபெற்று வரும் நிலையில் தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், அன்னப்பன் பேட்டையில் இருந்து திருவிடை மருதூர் தாலுகா, அணைக்கரை வரையில் சுமார் 60 கிலோ மீட்டர் தொலைவிலான தேசிய நெடுஞ்சாலை பணியினை மாநிலங்களவை உறுப்பினர் கல்யாணசுந்தரம் மற்றும் தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கோ.வி.செழியன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்நிலையில் கும்பகோணம் அருகே பல நூற்றாண்டுகளாக பயன்பாட்டிலும், பராமரிப்பிலும் இருந்து வரும் சோழர் கால புராதன சாலையாக கருதப்படும் கல்லணைபூம்புகார் சாலையில் உள்ள மேலகொட்டையூர் ரவுண்டானாவில் உள்ள சாலையை தடுத்து மேம்பால பணிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தொடங்கி நடைபெற்று வந்தது. இதனை கண்டித்து முன்பிருந்த சாலையிலிருந்து நேரிடையாக ஆம்புலன்ஸ் போன்ற இலகு ரக வாகனங்கள் செல்லும் வகையில் பாதை அமைக்க வேண்டி அப்பகுதி மக்கள் பல்வேறு கட்ட போராட்டங்கள் நடத்தினர். பின்னர் இது குறித்து அரசு அதிகாரிகளின் சார்பில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் இந்த சாலையை தடுத்து நடைபெற்ற மேம்பால பணிகள் நிறுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்ததன் பேரில் தற்போது நேரான சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் தஞ்சாவூர் விக்கிரவாண்டி தேசிய நெடுஞ்சாலை பணியை அதிவிரைவில் முடிக்க கோரியும் மற்றும் அந்த சாலைகளில் அருகில் உள்ள ஊராட்சி மற்றும் நகராட்சிகளை இணைக்கும் அணுகு சாலை அமைக்க வேண்டுமென மாநிலங்களவை உறுப்பினர் கல்யாணசுந்தரத்திடம் பொதுமக்களும், வணிகர்களும், பள்ளி மாணவ, மாணவிகளும் கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கையை ஏற்று தஞ்சாவூர் விக்கிரவாண்டி தேசிய நெடுஞ்சாலையில் கும்பகோணம் அருகே உள்ள மேலகொட்டையூர் பகுதியில் அணுகுசாலை அமைக்க வேண்டுமென மாநிலங்களவை உறுப்பினர் கல்யாணசுந்தரம் ஒன்றிய நெடுஞ்சாலைத்துறை அமைச்சரிடம் கோரிக்கை வைத்ததை முன்னிட்டு அப்பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் அணுகு சாலை அமைப்பதற்கான பணி துவங்கியது. இந்த பணியை மாநிலங்களவை உறுப்பினர் கல்யாண சுந்தரம், அரசு கொறடா கோ.வி. செழியன் ஆகியோர் நேற்று நேரில் பார்வையிட்டு பணிகளின் நிலை குறித்தும், அப்பகுதியில் சென்றுவரும் வாகனங்களால் சாலை போக்குவரத்து நெரிசல் ஏற்படாமல் இருப்பதற்கும் அதிகாரிகளிடம் ஆலோசனை வழங்கி ஆய்வு செய்தனர்.

இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் முத்துச்செல்வம், அம்மாபேட்டை ஒன்றிய குழு தலைவர் கலைச்செல்வன், திருப்பனந்தாள் ஒன்றிய துணைத்தலைவர் அண்ணாதுரை, ஒன்றிய குழு உறுப்பினர் குமார், கோவிலாச்சேரி ஊராட்சி மன்ற தலைவர் சுதாகர், பட்டேல் நிறுவனத்தின் பொது மேலாளர் மல்லிகார்ஜுனன், திட்ட இயக்குனர் செல்வகுமார், நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் உதயச்சந்திரன், உதவி கோட்ட பொறியாளர் சிவராமன், கும்பகோணம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவக்குமார் மற்றும் ஆனந்தராஜ் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

## கலைஞர் நூற்றாண்டு - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

## பெரம்பலூரில் கைப்பந்துப் போட்டி!

### சி.இராஜேந்திரன் - எம்.பிரபாகரன் பரிசு வழங்கினர்!

பெரம்பலூர்,டிச.15-

பெரம்பலூர் மாவட்டத்தில், கலைஞர் நூற்றாண்டு விழா, மற்றும் மாநில இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு,

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாடு அணி சார்பாக.

மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டி டிசம்பர் 2மற்றும் 3. ஆகிய தேதிகளில் இரண்டு நாட்கள், பெரம்பலூர் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் தொடங்கி நடைபெற்றது. இந்த போட்டியை பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர்

தொடங்கி வைத்தனர்.

இப்போட்டியில் மாவட்டத்தில் இருந்து 24 அணியை சேர்ந்த வாலிபால் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டு விளையாடினார்கள். டிசம்பர் 3ம் தேதி அன்று நடந்த இறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட விளையாட்டு மைதானத்தில் பரிசளிப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் முதல் நான்கு இடங்களில் வெற்றி பெற்ற அணி வீரர்களுக்கும், சிறப்பாக விளையாடிய விளையாட்டு வீரர் இரண்டு பேருக்கும் மற்றும், நடுவர்கள், நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த பரிசுகளை மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் பயிர்களை வழங்கினார்கள்.

இதில் மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், வேப்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் சி. ராஜேந்திரன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஆர். சிவசங்கர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கார்மேகம், துணை அமைப்பாளர்கள் செ.சாம்ராஜ், குணசேகரன், வெற்றிவேல், மனோகர், சுரேஷ், வழக்கறிஞர் ரகுபினேஷ் மற்றும் விளையாட்டு வீரர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் கைப்பந்துப் போட்டியினை மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தொடக்கி வைத்தார். உடன் மாநகரச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் மரு.அஞ்சுகம் பூபதி, ஒன்றியச் செயலாளர் கார்த்திகேயன், பகுதி செயலாளர்கள் கார்த்தி, சதாசிவம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஆர்.ராணி கண்ணன், மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் ராஜ்குமார், ஆசாத், மனவழகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## அமைச்சர் கே.என்.நேரு தலைமையில்

## சேலம் மத்திய மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சேலம், டிச. 15-

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

சேலம் மத்திய மாவட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 17.12.2023ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு சேலம் 5 ரோடு K.M.B திருமண மண்டபத்தில் கழக முதன்மைச் செய லாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், பகுதி கழக செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள், மாநகர கோட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட கழக, மாநகர கழக பிரதி நிதிகள் மற்றும் இளைஞர்



அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, தொழிலாளர் அணி, இலக்கிய அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நல அணி, சிறுபான்மையினர் நலப்பிரிவு அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, வழக்கறிஞர் அணி, மருத்துவர் அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி, மீனவர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச் சூழல் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் வருகை தந்து கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 23.12.2023 அன்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலம் வருகை.

கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாடு

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.



கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு, திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் சிறுமொளசி சமத்துவபுரம் சுரேஷ்குமார்– வனிதா தம்பதியருக்கு பிறந்த குழந்தைக்கு நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் குழந்தையின் இல்லம் தேடிச் சென்று தங்க மோதிரம் அணிவித்தார். இதில் வட்டூர் ஜி.தங்கவேல், தா.கார்த்திகேயன், ஆர்.நடேசன், மயில்சாமி, ராஜபாண்டி (எ) ராஜவேல், டி.சுரேஷ்பாபு, மல்லை ஜெகதீஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.